**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. .383/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 4<br>Defense<br>Court |
| Name | திரு. கணபதி |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

2 ம் எதிரி ஆஜர். 3 ம் எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21$^{th}$ day of November 2025.

நான் மருதகுளத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து **அ.சா.ஆ.3** ஆகும். தேதி மாதம் ஞாபகமில்லை சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக நான் வேலைபார்த்துவிட்டு வீட்டருகே வரும்போது காலை 11.00 மணியளவில் போலீஸார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். போலீஸார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். வழக்கு பற்றி எந்த விபரமும் தெரியாது. வழக்கின் எதிரிகளை தெரியும். என்னுடைய ஊரைச்சார்ந்தவர்கள். வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

26.05.2015 ஆம் தேதி மாலை 18.00 மணிக்கு சம்பவ இடமான அ.சா.1ன் வீடு அதன் சுற்றுபுறங்களையும் மூன்றடைப்பு காவல் உதவி ஆய்வாளர் உங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்த போது உடன் இருந்து சாட்சியாக கையெழுத்து செய்துவிட்டு தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. .383/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 3<br>Defense<br>Court |
| Name | திருமதி. ஆறுமுகம் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

2 ம் எதிரி ஆஜர். 3 ம் எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21th day of November 2025.

நான் மருதகுளத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். வழக்கின் எதிரிகளை தெரியும். என்னுடைய பக்கத்து வீட்டுகாரர். 26.05.2015 ம் தேதி காலை 05.30 மணியளவில் நான் வீட்டின் வாசலலை கூட்டிவிட்டு, தெளித்து கோலம்போடுவதற்காக வீட்டிலிருந்து வெளியே வந்து பார்த்தேன். வாசலில் குப்பை இருந்தது. இப்போதுதான் வாசலை கூட்டிவிட்டு சென்றேன், அதற்குள் யார் குப்பைகளை போட்டார்கள் என பொதுவாக சொன்னேன். அப்போது பேச்சியம்மாள் உன் வீட்டு குப்பைதான் தேவடியா என சொன்னார். வெளியே வந்துவிட்டால் வாருங்கள் என பேச்சியம்மாள் அவரது மகனையும், கணவரையும் அழைத்தார். பேச்சியம்மாள் என்னை இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டார். என்னுடைய சத்தம்கேட்டு வீட்டிலிருந்த எனது கணவர் வெளியே வந்தார். மாடசாமி மற்றும் அவரது மகன் கையில் கம்பு வைத்திருந்தார்கள். பேச்சியம்மாள் கையில் வாரியல் வைத்திருந்தார். பேச்சியம்மாள் என்னை வாரியலாலும், கையாலும் அடித்து

என்னை பிடித்துக்கொண்டார். மாடசாமி மற்றும் அவரது மகன் எனது கணவரை வலதுதோள்பட்டையிலும், தலையிலும் அடித்தது அவருக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. எனது பையனுக்கு திருமணம் முடிந்து 4 நாட்கள் ஆகியதால் எனது மகனை நான் கூப்பிடவில்லை. ஆனால் எனது மகன் எனது சத்தம்கேட்டு வெளியே வந்து பார்த்துவிட்டு அ.சா.1 யை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அழைத்துசென்றார். எனது கணவர் மட்டும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். எனக்கு ஏற்பட்டா காயத்தை நான் சொல்லவில்லை. போலீஸார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.